அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044- 4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்:301/2015
தேதி : 21.12.2015

## ஒரே நாடு, ஒரே சந்தை ஒரே வரி என்ற நிலை உருவாக சரக்கு மற்றும் சேவை வரி (GST) மசோதா நடப்புக் கூட்டத்தொடரிலேயே நிறைவேற்றப்பட வேண்டும். சமக தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ வலியுறுத்தல்

ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு அடிப்படை அத்தேசத்தின் நிதி ஆதாரங்கள் தான். நிதி ஆதாரங்களில் முதலிடம் வகிப்பது பொதுமக்கள் செலுத்தும் வரிகள் தான். அரசு விதிக்கும் வரிகள் சீரமைக்கப்பட்டால்தான் மக்களுக்கும் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்கும். அளவுக்கு அதிகமான, நியாயமற்ற வரி விதிப்புகளால் புரட்சிகள் ஏற்பட்ட வரலாறுகளும் நாம் அறிந்தவை தான்.

இந்தியாவிலும் 1991 முதல் பொருளாதார சீர்திருத்தங்கள் ஏற்பட்ட போது வரி விதிப்பு கொள்கைகளிலும் வியத்தகு மாற்றங்கள் உருவாகி வந்துள்ளன. பல்வேறு வரி விதிப்பு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, வரிகள் குறைக்கப்பட்டுள்ளன.அதன் தொடர்ச்சியாக தற்சமயம் சரக்கு மற்றும் சேவை வரி (GST) என்ற சிறப்புமிக்க வரி சீரமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் சட்ட வடிவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மக்களவையில் நிநிறைவேறுவதற்காக காத்திருப்பில் உள்ளது.

இம்மசோதா அமல்படுத்தப்பட்ட பிறகு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 2 சதவிகிதம் அதிகரிப்பு, மத்திய சுங்க வரி, சேவை வரி, மதிப்புக் கூட்டு வரி, நுழைவு வரி, ஆக்ட்ராய் போன்ற பல்வேறு மறைமுக வரிகளை உள்ளடக்கி ஒரே வரியாக எளிமைப்படுத்தப்படுதல், பல்வேறு நிலைகளில் வரி விதிப்பு என்பதைத் தாண்டி ஒரே ஒரு நிலையில் வரி வசூலித்தல், தற்போது இருப்பதை விட வருவாய் அதிகரிப்பதற்கான வாய்ப்பு, வரி வசூலிப்பில் வெளிப்படைத் தன்மை, ஊழலுக்கு வழி வகுக்காத நிலை, உற்பத்திக்கும் சேவைக்கும் இடையில் சமமாக பகிர்ந்தளிக்கப்படும் வரிச்சுமை, குறிப்பிட்ட கால கட்டத்திற்குப் பிறகு விலைவாசி குறைவு, ஏற்றுமதி பல மடங்கு அதிகரிப்பதற்கான வாய்ப்பு என பல்வேறு நற்பயன்களை உள்ளடக்கிய GST வரி விதிப்புக் கொள்கையை சமத்துவ மக்கள் கட்சி பாராட்டி வரவேற்கிறது.

GST வரிக் கொள்கை முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே முன்மொழியப்பட்ட ஒன்று. தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டும் காங்கிரஸ் கட்சியே இதற்கு முட்டுக்கட்டை போட்டு வருவது முற்றிலும் அரசியல் என்பதே அனைத்துத் தரப்பினரின் நம்பிக்கை. நாடாளுமன்றத்தின் நடப்பு கூட்டத் தொடரிலேயே இம்மசோதா நிறைவேற்றப்பட்டால் தான் திட்டமிட்டபடி வரும் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் நடைமுறைப்படுத்த முடியும்.

சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டால் " **ஒரே நாடு, ஒரே சந்தை ஒரே வரி** " என்ற கொள்கையைக் கொண்ட நாடாக இந்தியா திகழும். வளர்ந்த நாடுகள் உள்பட சுமார் 160 நாடுகளில் இது போன்ற வரி விதிப்பு முறை இருக்கும் போது நம் நாட்டில் நடைமுறைப்படுத்துவதில் தவறில்லை. இந்த வரி விதிப்பின் பிறகு தேசம் முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் உற்பத்தித் துறைக்கு முக்கியத்துவம் கிடைக்கப்பெற்று, நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சி ஏற்படும் என்பதும் நடைமுறை சாத்தியமே.

மாநிலங்களுக்கான வரி வருவாய் குறைந்து மத்திய அரசின் பிடியில் மாநிலங்கள் சிக்கித் தவிக்கும் சூழல் ஏற்படும் என்பதில் ஓரளவு உண்மை இருந்தாலும், தொலை நோக்குச் சிந்தனையோடு பார்க்கும் போது, காலப்போக்கில் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலும் விதமாக சரக்கு மற்றும் சேவை வரி அமையும் என்பதில் எந்த வித மாற்றுக் கருத்தும் இல்லை.

எனவே மற்ற மசோதாக்களோடு GST மசோதாவும் நிறைவேற்றப்படுவதற்கு அனைத்து கட்சிகளும் முன்வர வேண்டும். மேலும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தும் சில மாற்றங்களை ஆளும் கட்சி பரிசீலனை செய்து தேவையான மாற்றங்களைக் கொண்டு வந்து இம்மசோதா நிறைவேறுவதில் முழுக்கவனம் செலுத்த வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்